(இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு இனும்கள் (துணை) திருத்த மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு இனும் (துணை) திருத்த மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம்மசோதாவை இம் மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப்படுத்தப் படுகிறது.

(உ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு சென்னை நகர நில வருவாய் வரி வசூல் (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு சென்னை நகர நில வருவாய் வரிவசூல் (திருத்த) மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம்மசோதாவை இம் மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப்படுத்தப்படுகிறது.

4 அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(இ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தமிழ்நாடு 1967-ஆம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதாவை இப்பேரவை முன் கொண்டு வருவதற்கும் ஆய்வுக்கு எடுத்துக்கொள்வதற்கும் மேன்மைமிகு ஆளுநர் அவர்கள் இசைவு தெரிவித்திருக்கிறார்கள்.

எனவே, இம்மசோதாவைப் பேரவை முன் அறிமுகப்படுத்த மாண்புமிகு உணவு. அமைச்சர் அவர்கள் அனுமதி கோருவார்கள்.

5. அரசினர் மசோதாக்கள்—தொடர்ச்சி.

(எ) தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதா.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1967-ம் ஆண்டு வேளாண்மை வருமான வரி (திருத்த) மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்த அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு நிறைவேற்றப்பட்டு அனுமதி வழங்கப்பட்டது.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : இம்மசோதாவை இம்மாமன்றத்தின் திருமுன் அறிமுகப்படுத்துகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இம்மசோதா அறிமுகப்படுத்தப் படுகிறது.